தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 ஏப்ரல் 2, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியாகும் கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

பாஸ்பேட் தன்மையற்ற டிடர்ஜெண்ட் மூலப்பொருள் தயாரிக்கும் உரிமை.

*2606 திரு கோ. பூவராகன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் அருகே பாஸ்பேட் தன்மையற்ற டிடர்ஜெண்ட் மூலப்பொருள் தயாரிக்கும் உரிமை யாருக்கேனும் வழங்கப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) ஹென்கெல், கேஜஎஎ என்ற மேற்கு ஜெர்மனி நிறுவனத்துடன் இணைந்து திருவாளர்கள் ஸ்பிக் பைன் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் ஆண்டொன்றுக்கு 30,000 டன்கள் திறம்கொண்ட பாஸ்பேட் இல்லாத டிடர்ஜென்ட் தயாரிக்க

53–83—1

உரிமம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டம் செயல் படுத்தப்படும் எனத் தெரிகிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியோடு இந்த டிடர்ஜென்ட் மூலப்பொருள் தயாரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே உள்நாட்டு முதலீடு என்று சொல்லப்படுகின்ற, அந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நம்முடைய முதலீடு எவ்வளவு? வெளிநாட்டு முதலீடு எவ்வளவு? ஸ்பிக் நிறுவனத்தினர் ஏற்கெனவே பல இடங்களில் பல துறைகளில் தொழில்களைத் துவங்கி இருக்கிறார்கள். எனவே இது 'மோனாப்பொலி ட்ரேட்' என்பதன் கீழ் வருகிறதா? அல்லது அதற்கும் மீறி இதற்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தொடக்கத்தில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப்பட்டது. ஜாயின்ட் செக்டார்–இல் இதைத் தொடங்குவதற்கு ஒப்புதல் தந்து ஸ்பிக் ஃபைன் கெமிக்கல்ஸ் என்ற பெயரில் அனுமதி வழங்கப் பட்டது. பிறகு இந்த மதிப்பீடு 35 கோடி ரூபாயிலிருந்து இப்போது அதிகமாகி 56 கோடி ரூபாய் என்று ஆகிவிட்ட நிலையில் அவர்கள் தொடர்ந்து இந்த ஜாயின்ட் செக்டாரில் இயங்குவதற்கு இல்லை என்று தெரிவித்த காரணத்தால் இப்போது தமிழ்நாடு பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிட்டெட்டும் டிட்கோவும் இணைந்து ஜாயின்ட் செக்டார் மூலமாக இந்தத் தொழில் தொடங்கப்பட இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்பிக் நிறுவனம் ஏற்கெனவே டிட்கோவிலிருந்தும், சிட்கோவில் இருந்தும் இன்னும் பல நிதி நிறுவனங்களிலிருந்தும் நிறையக் கடன் பெற்றிருக்கிறார்கள். அந்தக் கடன்கள் எல்லாம் நீண்ட நாட்களாக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதுகுறித்து ஏதாவது முயற்சி எடுத்து, நடவடிக்கை எடுத்து வசூலிக்கப்படுகிறதா? இதுபோன்று நம்முடைய நிதி அதிகமாக வழங்கப்படுகிற தனியார் துறையில் இயங்குகின்ற தொழில் நிறுவனத்தில் அரசாங்கத்திலிருந்து ஏதாவது ஒரு டைரக்டர் போடுவதற்கு வழி வகை உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இதை உற்றுக் கவனித்து வருகிறார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்று நான் கருதுகிறேன். அரசின் சார்பாக–டைரக்டர் மாத்திரமல்ல–ஜாயின்ட் செக்டாரில் 26 சதவீதம் அரசுக்கு என்று இருக்கும்போது அரசின் சார்பில்

1990 ஏப்ரல் 2]

தான் அதனுடைய தலைவர் இருக்க வேண்டும் என்பது நம்முடைய அழுத்தமான கொள்கையாகும். ஆனால், கடந்த காலத்தில் ஒருவருக்குப் பதிலாக இருவர், அவர்களே இருந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனை இந்த அரசு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது, தனியார், அதே நேரத்தில் கூட்டுத் துறை தொழிலைச் செய்ய முன் வந்தாலும் கூட அவர்களுடைய ஆதிபத்தியம் அதிலே நிலைக்க வேண்டும் என்பதற்கு அரசு என்றைக்கும் இடம் தராது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை பணியாளர்கள் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் தினப் படி.

*3046 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறையைச் சார்ந்த பணியாளர்கள் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் அலவென்ஸை (D.A.) உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் அலவன்ஸ் (D.A.) 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க அரசாணை எண். 666, நிதித் துறை, நாள்/27-6-1989-ல் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணை காவல் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் பொருந்தும்.

(9.05 மணி)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறையினருக்கு தற்போது வழங்கப்படும் அலவன்ஸ் இரண்டு மடங்கு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். இந்த இரண்டு மடங்கு என்பது சாதாரணமாக ஒரு நாளைக்கு 6 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் இன்றைக்கு 12 ரூபாய் தான் கிடைக்கும். ஆகவே இது போதுமானதல்ல. இதனால் பல தவறுகள் நடப்பதற்கும் வழி ஏற்படுகிறது. ஆகவே இதைக் குறைந்த பட்சம் 25 ரூபாய் அளவுக்காவது உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்புக்கு வருவதற்கு